**பேலியகொடை நகர சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூன் 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, பேலியகொடை நகர சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது தீர்வைக்கெனப் பெறப்பட்ட ரூபா 408,848 பெறுமதியான 04 காசோலைகளுக்குக் கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்தது. அதனை கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கில் வரவு வைக்காது அதற்கெனப் பெறப்பட்ட பணம் கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதனால் அக்கணக்கு அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | காசோலைக் கொடுப்பனவு மறுக்கப்படுமாயின் கடன்பட்டோரில் வரவு வைக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டிற்கான கணக்கில் திருத்தம் செய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் போது 03 சந்தரப்ப்ங்களில் கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட ரூபா 377,382 தொடர்பாகக் கடன் | எதிர்காலக் கொடுப்பனவிற்கு கடன் கொடுத்தோர் நிதியேற்பாடு | ஏற்பட்ட தவறு மீண்டும் வராது பார்த்துக் கொள்ளப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை. | செய்யப்பட வேண்டும். | |
| (iii) | உருப்படிச் சொத்துக் கணக்குகளின் ரூபா 821,911 கணக்கிலிடப்படாது ரூபா 16,465,890 பேரேட்டு மீதி கணக்கிலிடப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் உருப்படிச் சொத்துக்களது கையிருப்பு குறிப்பிடப்பட வேண்டும். | பழைய மீதிகளாகிய பேரேட்டு மீதி தொடர்ந்து வருவதுடன், திரண்ட நிதியத்தல் சீராக்கல் செய்து திருத்தம் செய்யப்படுவதற்கு 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 04 கணக்கீட்டு விடயங்களது மீதிகளுக்கும் துணைப் பதிவேட்டு மீதிகளுக்குமிடையே ரூபா 16,044,075 வித்தியாசமிருந்தது. | குறித்த மீதிகளது வித்தியாசத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஊழியர்கள் மற்றும் களஞ்சியக் கையிருப்பு மீதி வேறுபாட்டுத் தகவல்கள் இல்லாமையால் திருத்தம் செய்ய முடியாதுள்ளது. ஏனைய மீதிகளின் வேறுபாடுகள் நாளதுவரையாக்கப்படும். |

**(இ) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அநேக ஆண்டுகளாக இனங்காணப்படாதிருக்கும் ரூபா 192,716 கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலை மீதி தீர்வு செய்யப்படாதிருந்தது. | காலங் கடந்தவைகளாக கருதப்பட இடமளியாது அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்படும். |
| (ii) | 2004 முதல் 2017 வரை நிலவி வரும் ரூபா 11,223,488 பெறுமதியான கடன்கொடுத்தோர் மீதியைத் தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. | குறித்த புத்தகங்களும் பதிவேடுகளும் உத்தியோகத்தர்களால் முறையாகவும் நாளதுவரையாக்கப் பட்டும் பேணப்பட வேண்டும். | கடன்கொடுத்தோர் பதிவேடு நாளதுவரையாக்கப் படாததால் இத்தவறு ஏற்பட்டுள்ளது. |

(ஈ) **கணக்காய்விற்குத் தேவையான ஆவணச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உறுதிப்படுத்தலுக்கான சான்றின்மையால் ரூபா 98,920,198 பெறுமதியான 02 கணக்கீட்டு விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களிலுள்ள உறுதிப்படுத்துதல் சான்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| மேல்மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது மக்களின் சுகாதாரக் கேட்டுத் தவிர்ப்பு சட்டவாக்கத்தின் 2(அ) பிரிவு | பொது வடிகால்களில் அசுத்த நீரை வெளியேற்றிய 16 ஹோட்டல்கள் / வியாபார நிறுவனங்கள் மற்றும் 37 வீடுகள் சுகாதாரப் பரிசோதகர்களால் இனங்காணப்பட்டிருந்தனர். அவற்றைத் திருத்துமாறு குறித்த ஹோட்டல்கள் / வியாபார நிறுவனங்களுக்கு 2018 மே மாதம் அறிவிக்கப்பட்ட போதும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவுறுத்தப் பட்டுள்ளனர் |

## 1.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிராம உத்தியோகத்தர்கள் உறுதி செய்யாது வரிச்சலுகை மற்றும் சொத்துக்களை மூடி விடுதல் எனும் அடிப்படையில் மீளாய்வாண்டில் ரூபா 209,919 வருவாய் பதிவழிக்கப்பட்டிருந்தது. | விடயத்திற்குப் பொருத்தமான அமைச்சரது அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | வரிச் சலுகைகளாக ரூபா 204,948 மற்றும் சொத்துக்களை முடிவுக்கு கொண்டு வருதல் சம்பந்தமாக ரூபா 4,971 என பதிவழிக்கப்பட்டது. தனியார் கோரிக்கைகளின் பேரிலேயே. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 22,875,793 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 12,932,516 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்வையும் வரியும் | 42,000 | 41,524 | 36,467 | 26,918 | 40,500 | 41,450 | 42,792 | 26,754 |
| (ii) | வாடகை | 4,071 | 4,564 | 3,420 | 997 | 3,499 | 3,229 | 3,264 | 103 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,306 | 2,471 | 2,480 | 6 | 2,127 | 1,990 | 1,990 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 18,068 | 31,417 | 31,417 | 343 | 19,480 | 6,353 | 6,353 | - |

#### 2.2.2 வருவாய் சேகரிப்பிலான செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ஏனைய வருவாய் ரூபா 18,068,000 ஆகும். எவ்வாறாயினும், ரூபா 31,417,000 சேகரிக்கப்பட்டதால் மதிப்பீடு சாத்தியமானதாக அமையவில்லை. | சாத்தியமானவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

#### 2.2.3 தீர்வையும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 டிசம்பரில் உள்ளவாறான ரூபா 26,922,350 தீர்வை | தீர்வை நிலுவையை | தற்சமயம் ரூபா 2,497,416 நிலுவை அறவிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| நிலுவையில் ரூபா 50,000 க்கு மேற்பட்ட 17 தீர்வைக் கூறுகளிலிருந்து 2019 மே 31 இல் உள்ளவாறு ரூபா 2,703,788 அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவிட விதிமுறை தயாரிக்கப்பட வேண்டும். | மிகுதி அறவிடப்படும். |

**2.2.4 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வாடகை வருமானமாகிய ரூபா 1,144,000 குறைவாக கேரிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் வருவாய் ஆண்டின் போதே அறவிடப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் சகல வருவாயும் வருவாயாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் வருமான நிலுவை மாத்திரமே பட்டியலிடப்பட்டுள்ளது. அதனால் 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டின் வருவாய் குறைந்துள்ளது. |
| (ஆ) | பொதுச் சந்தையின் 02 சபைகளிலிருந்தும் அஞ்சல் அலுவலகத்திலிருந்தும் கட்டணம் அறவிடப்படவில்லை. 14 கடைகளிலிருந்து மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய வாடகையில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட ரூபா 488,710 தொகையானது 2019 மே 23 அன்றும் அறவிடப்படாதிருந்தது. | அரசாங்க விலை மதிப்பீட்டிற் கமைய வாடகை அறவிடப்பட வேண்டும். | கடைகளுக்கான 100 சதவீத மதிப்பீட்டுப் பெறுமதி சபை தீர்மானித்தபடி 50 சதவீதமாகியுள்ளது. |
| (இ) | நகர சபைக்குரிய சொத்துக்களது உரித்து உரித்துறுதியின் மூலம் உறுதி செய்யப்படாமையால் முன்னைய ஆண்டில் வருவாயை ஈட்டிய சபையின் 10 சொத்துக்களிலிருந்து மீளாய்வாண்டில் வருவாய் பெறப்படவில்லை. | சபைக்குரிய சொத்துக்களது உரித்து உறுதி செய்யப்பட வேண்டும். | உரித்துறுதி மூலம் நகர சபையின் சொத்துக்கள் உறுதி செய்யப்படும் எதிர்காலத்தில் குத்தகைக்கு வழங்கப்படும். |

**2.2.5 ஏனைய வருவாய்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபைப் பிரதேசத்தில் உள்ள 06 வியாபார மற்றும் | வியாபார மற்றும் தொழில் | பரிந்துரை வழங்கப்பட்ட 02 தவிர ஏனைய 4 க்கும் |

| | | |
|---|---|---|
| தொழில் நிறுவனங்கள் மீளாய்வாண்டில் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களுக்களைப் பெறவில்லை. | நிறுவனங்களிலிருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | பரிந்துரை வழங்கப்படவில்லை. |

**2.2.6 ஏயை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தொலைத்தொடர்பு கோபுர வருவாய் | | |
| 2019 மே 23 ஆந் திகதியளவிலும் 09 தொலைத்தொடர்புக் கோபுர தீர்வை ஆகிய ரூபா 94,927 அறவிடப்படாதிருந்தது. | குறித்த கட்டணம் அறவிடப்பட வேண்டும். | கடித மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சகல தொகையும் அறவிடப்படும். |
| (ஆ) கழிவுப்பொருள் வருவாய் | | |
| மீளாய்வாண்டின் போது 187 தொழில் மற்றும் வியாபார நிறுவனங்களிலிருந்து கழிவுப் பொருள் அகற்றலுக்கான கட்டணம் அறவிடப்படவில்லை. | குறித்த கட்டணம் அறவிடப்பட வேண்டும். | கழிவுப்பொருள் வருவாய் 2019 முதல் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) பூர்த்தி செய்யப்படாத பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 152,461 பெறுமதியான செயற்திட்டம் ஒன்று 2018 மே 22 ஆந் | பிரதேசத்துக்கு அத்தியாவசதியமானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான | மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 152,460 க்கான செயற்திட்டம் நிறைவேற்றப்படாது |

| | | |
|---|---|---|
| திகதியளவிலும் பூர்த்தியாக்கப்படவில்லை. ஒப்பந்தகாரர் ஒருவரைத் தெரிவு செய்து உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட ரூபா 493,489 க்காக 02 செயற்திட்டங்கள் அத்தினத்தில் பூர்த்தியாகாது இருந்தன. | செயற்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு திட்டத்துக்கு ஏற்ப பூர்த்தி செய்யப்பட வேண்டும். | பிரதேசத்தின் ஏனைய அத்தியாவசிய செயற்திட்டத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. |

**(ஆ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2015-2030 காலப்பகுதியின் போது அடைய வேண்டிய நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டு அந்நோக்கங்களும் இலக்குகளும் அளவிடப்படுதல் மற்றும் வருடாந்த இலக்குகள் இனங்காணப்படுதல் மற்றும் அவற்றினது செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் நிகழவில்லை. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரித்து அந்நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கங்களும் இலக்குகளும் உள்ளடக்கப்பட்டவாறு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட வாறுள்ளது. |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 552,083 கடன் மீதியும் சேவை விலகிய, சேவையிலிருந்து நீக்கப்பட்ட மற்றும் மரணமடைந்த 40 பேரிடமிருந்து வருமதியாக உள்ள ரூபா 804,800 கடன் மீதிகளும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சபை பெற வேண்டிய கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | முப்பது உத்தியோகத்தர்களின் ரூபா 330,055 கடன் மீதியை பதிவழிப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. ஓய்வு பெற்றவர்களின் ரூபா 705,532 கடன் மீதியை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வாறுள்ளது. இருவரிடம் கடன் மீதி அறவிடப்பட்டுள்ளது. |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2003, 2007 ஆம் ஆண்டுகளில் களனி தர்மாலோக மாவத்தையில் உள்ள நாரம்மினிய வயலின் 1 ஆம் 2 ஆம் லொட்களுக்கு அண்மையில் இருந்த கால்வாயை அகலமாக்குவதற்கு 135 பார்ச்சர்ஸை இழந்ததாகக் குறிப்பிட்டு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. அதன்போது இழப்பீட்டுத் தொகையைக் குறிப்பாக உணர்த்தாது கொடுப்பனவுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. உரிமையாளர் அந்த பரிந்துரைப்படி ரூபா 82.5 இலட்சம் இழப்பீடாகச் சபை வழங்க வேண்டுமெனக் கோரியுள்ளார். இது கணக்குகளில் வெளிக்கொணரப்படவில்லை. | தனியார் சொத்துக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு செயற்திட்டங்கள் நடைபெற வேண்டும். | தனியார் விலை மதிப்பீட்டாளர் தீர்மானித்த தொகையே ரூபா 8,250,000 ஆகும். அரசாங்க விலை மதிப்பீட்டைப் பெறுவதற்குப் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யப்படும். அதற்குப் புறம்பாக, 2019 வரவு, செலவுத் திட்ட முன்மொழிவுகளில் ரூபா 50 இலட்சம் நிதி ஏற்பாடு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

### 3.4 பொருட் கொள்வனவு

#### வழங்கலும் சேவைகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை வளாகம் உள்ளடங்கலாக அலுவலக நவீனமயப்படுத்தலுக்கு அலுவலக மற்றும் தளபாடங்களை வழங்குவதற்கு கூறுவிலை கோரப்படும் போது மாதிரிப் படிவத்துக்கேற்ப மரத்தின் தன்மையும் அதன் பூர்த்தியாகிய தன்மையும் (அலங்காரங்களுடன்) குறிப்பிடப்படாமையால் அது பின்னர் தீர்மானிக்கப்பட்டு அதன் காரணமாக அப்பொருட்களின் மூலப் பெறுமதியிலும் பார்க்க ரூபா 212,250 அதிகரித்திருந்தது. அந்த அலுவலக உபகரணங்களது பாவனைக்கேற்ப வசதிகள் கருத்திற் கொள்ளப்படவில்லை. | தேவைக்கேற்ப மாதிரி வடிவம் தயாரிக்கப்பட வேண்டும். | நிறுவனங்களின் பிரதிநிகள் அவதானித்து வழங்கும் அறிவுறுத்துரைப்படி அந்த நிறுவனங்களிலிருந்து பெறப்படும். அந்த புதிய வகைப் பொருத்தமான மரம் தெரிவு செய்யப்பட்டது. சபை வளாகத்தின் பௌதீகத் தன்மை கருத்திற் கொள்ளப்பட்டு தேவைப்படுவது தேக்கு என வேலை அத்தியட்சகரும் தொழில்நுட்ப உத்தியோகத்தரும் தீர்மானித்தனர். |